நிலா

இருமாத இதழ்
இலவச வெளியீடு
5000 பிரதிகள்

புரட்டாதி - ஐப்பசி 2015 நிலா | சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு | இல. 35



# பாடசாலை நிர்வாகமுறைகளிலும் கற்பிதமுறைகளிலும் பெருமாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. ஆனால்...,

**கடந்த** இரண்டு வருடங்களாக பாடசாலை நேர அட்டவணை மாற்றங்கள் தொடர்பாக பிரான்ஸ் கல்வித்துறையும், பெற்றோர் அமைப்புகளும் தொடர்ந்து மோதிக் கொண்டே வருகின்றன.

இதைவிட, 2014 ஜனவரி charlie Hebdo தாக்குதலுக்குப் பின்னர் சில மாணவர்களின் எதிர்வினைகள், பாடசாலைகளில் மாணவர்களுக்கு பிரான்ஸ் குடியரசின் மதிப்புகள் சரியாகக் கற்பிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டுக்கு வழிவகுத்தது. மதச்சார்பின்மை பேணப்படுவதில் உள்ள சிக்கல்கள், ஆசிரியர் போதாமைகள் எனப்பல பிரச்சினைகள் இருந்தாலும் கல்வித்துறையும் அரசும் புதிய மாற்றங்கள், தீர்வுகள் எனப் பாடசாலைகளையும் மாணவர்களையும் எப்போதும் முன்னிலைப் படுத்தியே வந்துள்ளன. பிரான்சில் இந்தவருட வரவுசெலவுத்திட்டத்திலும் கல்வித்துறைக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இந்தவருடம் செப்டெம்பர் மாதம் 12 மில்லியன் மாணவர்களும், 874000 ஆசிரியர்களும் விடுமுறைகளுக்குப் பின் பாடசாலைகளுக்குத் திரும்பியுள்ளனர்.

பெற்றோருக்கும் பாடசாலைக்குமான தொடர்பு தினமும் நிகழ்ந்தாலும் பாடசாலை நடைமுறை தொடர்பான அறிவு மிகமிகக் குறைவாகவேயுள்ளது

> **பெண்கள் உயர்கல்வி கற்பதற்கான வழிமுறைகள் 1880 லேயே பிரான்சில் சாத்தியப்பட்டது. அங்கும் அவர்களுக்கான தனிக்கல்விக்கூடங்களும் மட்டுப்படுத்தப்பட்ட கல்வி முறைகளுமே வழுங்கப்பட்டது. உயர்நிலைக்கல்வியின் இறுதியில் அவர்களுக்கு வழுங்கப்படும் சான்றிதழ்கள் பல்கலைக்கழகங்களுக்குள் நுழையும் தகுதிகளற்றவையாக இருந்தன. இந்த முறைகள் எல்லாம் மாற்றம் பெற்று ஆண், பெண் பேதமின்றி அனைவருக்குமான பொதுக்கல்வி முறையும், பாடசாலைகளும் வாய்க்கப்பெற்றது 1924ம் ஆண்டில்தான்!**

எனக் கல்வித்துறை கவலைதெரிவிக்கிறது. ஒவ்வொரு பெற்றோரும் தமது பால்ய காலத்தைப்போலவே பாடசாலைகள் தற்போதும் இயங்குவதாக எண்ணிக்கொள்கின்றனர்.

ஆனால் தற்போது பாடசாலை நிர்வாகமுறைகளிலும், கற்பிதமுறைகளிலும் பெருமாற்றங்கள் உருவாகிவிட்டன. இதை அவர்கள் உணருவது இல்லை என பாடசாலை நிர்வாகங்கள் பெற்றோர்கள் மீது சலிப்பை வெளியிட்டதோடு பாடசாலை நிர்வாகச்செயற்பாடு தொடர்பாக சில தகவல் வெளியீடுகளையும் வெளியிட்டுள்ளன.

## ● வகுப்புக்கள் பிரிக்கப்படும் முறை

ஒவ்வொரு மாணவனும் சரியான முறையில் ஒவ்வொரு வகுப்பிலும் தேர்ச்சி பெறவேண்டுமாயின் அந்த வகுப்பின் மாணவர்களின் தொகை முதல் ஒவ்வொரு மாணவனினதும் தனிப்பட்ட சுயவிபரம் வரை அக்கறைகொள்ளவேண்டியுள்ளது. அனைத்து வகையான குணாதிசயங்கள்


2ம் பக்கம் பார்க்க..

நிலா
www.nilafrance.com
தொடர்புகளுக்கு : சங்கீதா அச்சகம்
Tél: 01 44 72 08 94 sangeethafrance@gmail.com

கொண்டவர்களையும் சரிவரக்கலந்து ஒரு சமதன்மை கொண்ட வகுப்பாக அமைப்பது முக்கியமாகின்றது. இதுவே ஒரு சரியான வகுப்பு அமைவதற்கு முதல் கட்டமாகும். இதற்கு தாம் அதிக நேரம் செலவு செய்யவேண்டியுள்ளதென 96 சதவீத ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் மாணவர்களினதோ அல்லது பெற்றோர்களினதோ தனிப்பட்ட விருப்பங்கள், கோரிக்கைகளை தாங்கள் பெரும்பாலும் கருத்திலெடுப்பது இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

### ● நேர அட்டவணை

இது பெரும்பாலும் பாடசாலை அதிபர்களையே சார்ந்துள்ளது. இங்கு முக்கியமாக பேணப்படும் ஒரே ஒரு முறை மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் நாளாந்த அட்டவணையில் இடை வெளி விழுந்துவிடாதவாறு நேரத்தைப் பிரிப்பதேயாகும். பாடத்திட்டத்தை சரியாக பின்பற்றக்கூடிய வகையில் அதிக கவனம் செலுத்தவேண்டி பாடங்களை காலை நேரத்திலும் விளையாட்டு, இசை போன்றவை மாலை நேரத்திலும் பிரிக்கப்படுகின்றன. மேலும் ஆசிரியர் களின் ஒரு சில கோரிக்கைகள் பரிசீ லணை செய்யப்பட்டு பெரும்பாலும் அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றப்படுகின்றன. ஒரு ஆசிரியர் தனது நேர அட்டவணையில் மகிழ்ச்சி கொண்டாராயின் அந்த ஆசிரியர் மூலம் வேறு பலன்களை அப்பாடசாலை பெறமுடியும் என அதிபர்கள் நம்புகின்றனர்.



### ● ஆசிரியர்களின் மாத ஊழியம்


பிரான்சில் சாதாரணமாக ஒரு ஆசிரி யர் 2475 யூரோ ஊதியம் பெறுகிறார். இங்கும் பல ஏற்றங்கள் இறக்கங்கள் உள்ளன. ஒரு ஆரம்ப நிலை ஆசிரியர் 1690 யூரோக்கள் பெறுகிறார். இவற்றை விட வருடாந்த கூடுதல் கொடுப்பனவுகள் (Prime) உள்ளன. உயர்கல்லூரி ஆசிரியர்கள் விரிவுரையாளர்களுக்கு ஊதியம் 2900 யூரோ முதல் 3700 யூரோ வரை உயரும் வாய்ப்புள்ளது.

### ● ஒரு மாணவனின் செலவீனம்

ஒவ்வொரு குடும்பத்திலும் ஒவ்வொரு மாணவனுக்கும் அவரவர் வகுப்புகளுக்கு ஏற்ப செலவீனங்களில் மாற்றம் ஏற்படுகின்றது. ஆரம்ப பாடசாலை மாணவனின் உணவகச்செலவீனம் மட்டுமே பெற்றோருக்கான சுமை. இதைவிட ஒவ்வொரு வருட பாட–சாலைத் தொடக்கத்திற்கு 0 முதல் 50 யூரோ வரை செலவு எனவும் CP க்கு செல்லும் போது 50 முதல் 100 யூரோ வரை செலவு எனவும் தெரிவித்துள்ளனர் Collège செல்வோருக்கு உணவ–கச் செலவை விட 100 முதல் 150 யூரோக்கள் செலவாவதாகவும் தொழில்நுட்பக் கல்வி கற்போருக்கு கூடுதல் உபகரணங்கள் என 400 யூரோக்கள் வரை உயர்வதாகவும் தெரிவித்துள்ளனர். இவற்றைவிட பிரத்தியேக வகுப்புகள், இசை, நடனம் போன்ற வகுப்புகளிற்கான செலவீனங்கள் தனி.

பாலர் பிரிவு மாணவன் ஒருவருக்கு வருடத்துக்கு 6170 யூரோக்களை அரசு செலவு செய்கிறது. தொடர்ந்து ஆரம்ப பாடசாலை மாணவனுக்கு 6200 யூரோக்களாகவும் Collège மாணவனுக்கு 8240 யூரோ முதல் 10960 யூரோவாகவும் உயர்கின்றது. இங்கும் தொழில்நுட்பத்துறையினராயின் செலவு 12210 யூரோக்களாக உயர்கின்றது.







பிரான்சில் அனைவருக்கும் கல்வி அவசியம். அத்துடன் இலவசம் எனப்பாடசாலைகளுக்கு வித்திட்டவர் Charlemagne மன்னனே. தனது சாம்ராச்சியத்தை சரியான முறையில் நிர்வகிக்க வேண்டுமானால் கற்றமாந்தர்கள் அவசி யம் எனக்கருதினார். இந்நோக்கிலேயே அனைவருக்குமான இலவசக்கல்வி முறை தோற்றம் பெற்றது.

இந்த வழிமுறையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது பிரான்சின் மூன்றாம் குடியரசு (1870-1940). கல்வித்துறை உருவாக்கத்தில் பெரும்பங்கு வகித்த Jules Ferry அனைவருக்கும் கட்டாயமான இலவசக்கல்வி அத்துடன் மதச்சார்பற்ற பாடசாலைகள் என அனைத்தையும் 1881-1882 காலப்பகுதியில் சட்டமூலமாக்கினார்.

### ● வருடவிடுமுறைகளை யார் தீர்மானிக்கின்றார்கள்?

மூன்று வருடங்களுக்கு ஒரு முறை தேசியக்கல்வி ஆணை யகமே இம்முடிவுகளை எடுக்கின்றது. இருப்பினும் பிரா ன்ஸ் மாணவர்களை அக்கடமி அடிப்படையில் மூன்று பிரிவுகளா கப் பிரித்து விடுமுறைகளை முன் பின் வேறுபடுத்தியுள்ளது. இவ்வேறுபடுத்தல்கள் உல்லாசத்துறை மற்றும் வீதிப்பாதுகாப்புத்துறையின் அழுத்தங்களின் அடிப்படையிலேயே வேறுபடுத்தப்பட்டுள்ளது.

மாணவர்களின் பெற்றோர் அமைப்புகள், 7 வார பாடசாலை யைத் தொடர்ந்து, 2வார விடுமுறை என்பதில் உறுதியாகவே உள்ளனர். இந்த அழுத்தத்தை கணக்கில் எடுத்தாலும் இறுதி முடிவுகளை கல்வித்துறையே தீர்மானிக்கின்றது.



**விவாதத்தில் வெற்றி பெற ஒரே ஒரு வழி தான் உண்டு; அது, விவாதங்களை தவிர்ப்பது தான்.**

— டேல் கார்னிஜி


# சங்கீதா அச்சகம்

**39, Bd. de la Chapelle**
**75010 Paris**
M°: La Chapelle
Gare du Nord

**sangeethafrance@gmail.com**
**Tél. / Fax :**
**01.44.72.08.94**

பிரான்சில்


# செப்ரெம்பர் 1 முதல்



- எரிவாயுவின் விலை 0.5 வீதத்தினால் அதிகரிக்கிறது. இந்த உயர்வு 70 லட்சம் வதிவிடங்களில் பிரதிபலிக்கும்.

RSA
Revenu de Solidarité Active

- RSA சமூககொடுப்பனவு 2 வீதத்தினால் உயர்கின்றது. தனி ஒருவர் என்றால் சமூக கொடுப்பனவு 524,16 யூரோவாகும். அண்ணளவாக மாதாந்தம் 10 யூரோக்களால் உயர்கின்றது. தனி ஒருவருடன் குழந்தை ஒன்று இருப்பின் 786,24 யூரோவும், கணவன், மனைவியுடன் இரண்டு குழந்தைகள் இருப்பின் 1100,74 யூரோவும் வழங்கப்படும்.



- பயணிகள் வாகன ஓட்டுனர்களிற்கு மதுபோதைப் பரிசோதனை கட்டாயமாக்கப்படுகிறது.

நிர்ணயத்திற்கு கூடுதலாக மதுசாரம் காணப்பட்டால் வாகனத்தை நகர்த்த சாரதிக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது.

- எதிர்காலத் தொழிற்பயிற்சியாளர் ஒருவருக்கு இனி 554 யூரோக்கள் வழங்கப்படும். இதுவரை 508 யூரோக்கள் வழங்கப்பட்டன. தொழிற் பயிற்சியாளர் ஆகக் குறைந்தது இரண்டு மாதமாவது தொழிற்பயிற்சி பெறுபவராக இருந்தால் மட்டுமே இவ்வுதவி கிடைக்கும்.



- பணப்பரிமாற்றம் 1000 யூரோவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை பிரான்சில் பணமாகப் பரிமாற்றம் செய்யக்கூடிய அதிகூடியதொகை 3000 யூரோவாக இருந்தது. ஆனால் வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் 10000 யூரோ வரை பணமாகப் பரிமாற்றம் செய்ய முடியும்.




- இனிமேல் ஓய்வூதியம் பெறுவோர் ஒரு மாதம் தாமதமாகவே(régime général) தங்கள் ஓய்வூதியத்தைப் பெறுவர். இவர்கள் 4 மாதங்கள் முன்னதாக விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப் பட்டுள்ளது. விவசாயிகளுக்கும் சுயதொழில் செய்வோருக்கும் ஒரே நிபந்தனைகள் 2017 ற்கு முன்னர் கொண்டுவரப்படும்.

Google OLD


Google NEW

## புதிய மாற்றங்கள்

ஆகஸ்ட், செப்டெம்பர் மாதங்களில் Google நிறுவனம் இரு பெரும் மாற்றங்களை நிகழ்த்தியுள்ளது. ஒன்று தலைமை மாற்றம், இரண்டு இலச்சினை (லோகோ) மாற்றம். எளிமை, புதுமை, தொழில்நுட்பம் எனத் தன்னைப் புதுப்பித்துள்ளது.

Google 1998ல் உதயமாகி இன்று தவிர்க்க முடியாத மையப்புள்ளியாக மாறிவிட்டது. 57 ஆயிரத்துக்கும் அதிகமான கணனி வல்லுனர்கள் பணியாற்றும் Google நிறுவனத்தின் தற்போதைய தலைமை நிர்வாகி சுந்தர் பிச்சை. தமிழ்நாட்டின் சென்னையைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயதேயான சுந்தர்ராஜன் பிச்சை தனது திறமையினாலும், அதீத முயற்சியினாலும் Google நிறுவனத்தலைமையை சாதகப்படுத்தியுள்ளார். 2004ல் Google ல் இணைந்த சுந்தர்பிச்சை இப்பதவிக்கு வரும் முன் கூகுளின் உற்பத்தித்துறைப் பிரிவுத் தலைவராக பதவி வகித்து வந்தார். வருட வருமானமாக 66 மில்லியாட் யூரோக்களை கணக்குக் காட்டும் கூகுள் நிறுவனத்தின் தலைமைக்கு சுந்தர்பிச்சையின் தெரிவு மிகச்சரியான தெரிவு என Google நிறுவனர்களில் ஒருவரான Larry Page தெரிவித்துள்ளார்.

கடந்த 17 வருட காலங்களில் Google லோகோவில் சில சிறிய மாற்றங்கள் அறியப்பட்டாலும் முதல் முறையாக முழுமையான மாற்றத்தைப் பெற்றுள்ளது. ஆரம்பத்தில் கணனியில் தேடுதளமாக மட்டுமே செயற்பட்ட Google இன்று பல சாதனங்களில் பல விதங்களில் பயன்படுத்தப்படுகின்றது. இத்தேவைகளின் அடிப்படையிலேயே மிக இலகுவான எழுத்துருவில் தெளிவான வண்ணங்களில் துல்லியமான இலச்சினை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. Google Logo ஆரம்பத்தில் Catull என்னும் எழுத்துருவால் Gimp மென்பொருள் உதவியுடன் உருவாக்கப்பட்டது. தற்போது தனக்கான பிரத்தியேக எழுத்துருவை உருவாக்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



**சிரிப்பதற்கும் பேசுவதற்கும் நேரமில்லையென்றால் எங்கோ தவறிழைத்துக் கொண்டிருக்கிறீர்கள் !**



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# பிரான்சிற்கு பெருமைசேர்க்கும்
# சுயஸ் கால்வாய்

**சுயஸ் கால்வாய் 2** ஆகஸ்ட் 6ம் திகதி எகிப்தில் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவில் கௌரவ விருந்தினராக பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா ஹொலந் கலந்து சிறப்பித்துள்ளார். எகிப்திற்கும் பிரான்சிற்கும் இடையிலான நட்புறவின் வெளிப்பாடாகவும், பிரான்சிற்கும் சுயஸ் கால்வாயின் தோற்றத்திற்குமான நீண்ட வரலாற்றின் கௌரவ மாகவும் அதிபர் அழைக்கப்பட்டு கௌரவிக் கப்பட்டுள்ளார்.

உலக வர்த்தகத்தில் முக்கிய இடம் வகிக்கும் சுயஸ் கால்வாயின் தோற்றம் 1859ல் ஆரம்பமாகி 10 வருட கட்டுமானங்களுக்குப் பின் 1869ல் திறந்து வைக்கப்பட்டது. இத்திட்டத்தை முன்னின்று வழிநடத்தி செயற்படுத்தியது பிரான்சும் பிரான்சின் கட்டுமானத் துறையினருமேயாகும்.

ஆரம்பத்தில் ஐரோப்பாவிற்கும் ஆசியாவிற்கும் இடையிலான வர்த்தகக் கப்பல் போக்குவரத்து ஆபிரிக்காக்கண்டத்தைச் சுற்றிப் பல ஆயிரம் கிலோமீற்றர்கள் பயணித்தே அடையமுடிந்தது. மத்தியதரைக்கடலையும் செங்கடலையும் குறுக்கு வெட்டாக இணைக்கும் சுயஸ் கால்வாயின் தோற்றத்துக்கு பின்னர் இத்தூரம் சரிபாதியா கக் குறைக்கப்பட்டது. 193 கிலோமீற்றர் நீளமான இக்கால்வாயை ஒரு கப்பல் 18 மணிநேரப்பயணத்தில் கடக்கும். நாளுக்கு 49 கப்பல்கள் சுயஸ் கால்வாய் வழியாகப் பயணிக்கின்றன. தற்போது புதிய கட்டுமானங்களுக்குப் பின்னர் நாளுக்கு 97 கப்பல்கள் பயணிக்க முடியும். அத்துடன் பயண நேரம் 11 மணி நேரங்களாகவும் மாற்றம் பெற்றுள்ளது. ஏதோவொரு காரணத்துக்காக சுயஸ் கால்வாயில் ஒரு நாள் போக்குவரத்து தடையானால் எகிப்து 62 மில்லியன் யூரோக்களை இழக்கின்றது.

1981ம் ஆண்டு முதல் ஆட்சியிலிருந்த Hosni Moubarak ன் ஆட்சியை எதிர்த்து 2011ல் வெடித்த மக்கள் புரட்சியைத் தொடர்ந்து அரசியல் மாற்றங்கள் உள்நாட்டு மோதல்கள் எனப்பல அவலங்களைக் கடந்து இன்று எகிப்து நிமிர்ந்து நிற்கின்றது.

2014ம் ஆண்டு அறிவிக்கப்பட்ட சுயஸ் கால்வாய் 2 திட்டம் 8 மில்லியாட் யூரோ செலவீனத்தில் ஒரு வருட கட்டுமானங்களுக்குப் பின் இன்று பெருமையாகத் திறந்து வைக்கப்பட்டுள்ளது எனக்குறிப்பிட்ட பிரான்ஸ் அதிபர் இத்திட்டம் உலக வர்த்தகத்துக்கு ஒரு வரப்பிரசாதம் எனவும் இத்திட்டத்தின் மூலம் பிரான்சும் கௌரவிக்கப்பட்டுள்ளமை பிரான்சிற்கும் பெருமையே எனவும் தெரிவித்துள்ளார்.

எகிப்தின் வருவாயில் முக்கிய பங்காற்றுவது சுயஸ் கால்வாய் போக்குவரத்தேயாகும். வருவாயாக இருந்த 4.17 மில்லியாட் யூரோக்கள் 2023ம் ஆண்டில் 11.7 மில்லியாட் யூரோக்களாக உயரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதே நேரம் கப்பல் போக்குவரத்துத்துறையினருக்கும் செலவீனங்கள் குறைக்கப்படவுள்ளது. இரண்டாவது கால்வாயின் தோற்றம் போக்குவரத்து நெரிசலைக் குறைத்து சீரான, வேகமான போக்குவரத்துக்கு வழிசெய்யவுள்ளது. இதன் மூலம் இன்று ஒரு கப்பலின் ஒரு நாள் செலவீனமான 46000 யூரோக்களில் 13700 யூரோக்களை சிக்கனப்படுத்த முடியும் எனக் கப்பல் போக்குவரத்து நிர்வாகமும் நிம்மதிப்பெருமூச்சு விடுகிறது.


அன்னை திரேசா
நற்பணிமன்றத்தின்
விசேட கலந்துரையாடல்
04.10.2015 ஞாயிறு மாலை 4.00 மணி
இடம் : 5, Rue Pierre l'ermite
75018 Paris. M°: La Chapelle




இல்லாதவருக்கு
கொடுக்கிறேன் என்றால்
என்னிடம் நிறைய இருப்பதாக
பொருளல்ல
ஒன்றுமில்லாத நிலையின்
வலியை உணர்ந்திருப்பதால் தான்...

ARS

# Allocation de rentrée scolaire (ARS)

### பாடசாலை ஆரம்பத்தில் மாணவர்கட்கான சமூகநல உதவி

செப்ரெம்பர் மாதத்தொடக்கத்தில் பிரான்சில் பாடசாலைகள் ஆரம்பமாகும்போது பாடசாலை உபகரணங்களுக்கான நீள்பட்டியலைப் பூர்த்திசெய்வது வருமானம் குறைந்த பெற்றோருக்குப் பெரும் சுமையே! இதை நிவர்த்திசெய்ய 6 வயதிற்கும் 18வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்களுக்கு அரசு உதவுகிறது.

முடிந்த ஆண்டின் குடும்ப வருமானத்திற்கேற்பவும், குழந்தைகள் எண்ணிக்கைக்கேற்பவும் சமூகநல உதவித்தொகை கணக்கிடப்படுகிறது. உதவி பெறுவதற்கான குடும்பமொன்றின் வருடவருமான எல்லை கீழ்வருமாறு நிர்ணயிக்கப்படுகின்றது.

- 1 குழந்தை உள்ள குடும்பம் 24 306 யூரோ
- 2 குழந்தை உள்ள குடும்பம் 29 915 யூரோ
- 3 குழந்தை உள்ள குடும்பம் 35 524 யூரோ
- 4 குழந்தை உள்ள குடும்பம் 41 133 யூரோ




இதற்கு மேல் உள்ள குழந்தை ஒன்றிற்கு வருமான எல்லை 5609 யூரோவினால் அதிகரிக்கப்படும்.

2015 செப்ரெம்பரில் குழந்தை பாட-சாலை செல்கின்றபோது வயதிற்கேற்ப குழந்தைக்குரிய சமூகநிதிப் பணம் வழங்கப்படு கின்றது.

- 6 – 10 வயதிற்கு இடைப்பட்ட குழந்தை ஒன்றிற்கு 362,63 யூரோ
- 11 – 14 வயதிற்கு இடப்பட்ட குழந்தை ஒன்றிற்கு 382,64 யூரோ
- 15 – 18 வயதிற்கு இடைப்பட்ட குழந்தை ஒன்றிற்கு 395,90 யூரோ

மாணவர்களுக்கான உதவித்தொகை ஜக் சிறாக் (Jacques Chirac) பிரதமர-ாக இருந்த காலத்தில் 1974ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. பிரான்சில் 3 மில்லியன் குடும்பத்தினர் இந்த சமூகநல உதவிப் பணத்தைப் பெறுபவர் களாக உள்ளனர்.

**சோம்பலுக்கு ஒரு நாள் கொடுத்தால், அது அடுத்த நாளையும் திருடிக் கொள்ளும்.**

— அலெக்சாண்டர்.

# 2017 தேர்தலை நோக்கி சார்க்கோசி..

மிக அண்மையில் தனது கட்சிப்பெயரை மாற்றியமைத்த நிக்கோலா சார்க்கோசி 2017ம் ஆண்டு அதிபர் தேர்தலை முன்வைத்து நகரத்தொடங்கி விட்டார். கட்சி இதுவரை சந்தித்து வந்த இறங்கு முகங்களிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்களை சரி யானமுறையில் நடைமுறைப்படுத்த முனைப்புக்காட்டுகிறார். மேலும் வளர்ந்துவரும் தேசியமுன்னணி ஆதரவாளர்களைத் தன் பக்கம் இழுத்துவிட அதிக ஆர்வம் காட்டுகிறார். இதன் மூலம் எதிர்வரும் அதிபர் தேர்தலின் முதல் சுற்றிலேயே வென்றுவிடவிரும்புகிறார்.

சோசலிசக்கட்சியினர், பிரான்சின் தற்போதைய நிலையில் மாற்றங் களைக் கொண்டு வந்துவிடலாம் என்னும் கற்பனையான நம்பிக் கையை மக்கள் மனதில் விதைத்து ஆட்சிபுரிந்து வருகின்றனர். ஆனால் அவர்களால் எந்தவித மாற்றங்களையும் ஏற்படுத்திவிட முடியாது. தற்போது அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக அனைத்துப் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுத்து சரியான முடிவு-களை முன்வைக்கக் கூடிய தகை மை Les Républicains கட்சிக்கு மட்டுமேயுள்ளது. இந்நிலையில் தேசிய முன்னணிக்கட்சியினரே




எங்களுக்கு வாக்களியுங்கள்! என்ற எங்களது கோரிக்கை அவர்களுக்கு பாடம் கற்பிப்பதற்கல்ல. மாறாக அவர்கள் பிரான்ஸ் மீதும், பிரான்சின் நலன்கள் மீதும் கொண்டுள்ள கவலைகளுக்குத் தீர்வாகவே முன்மொழிந்துள்ளேன் என சார்க்கோசி தனது நகர்வை ஆரம்பித்துள்ளார்.

## பிரான்ஸ் அமைச்சரவை கூட்டங்கள்

பிரான்ஸ் அமைச்சரவை வாராந்தக் கூட்டங்கள் பாரிஸ் 8ல் அமைந்துள்ள எலிசே (Elysée) மாளிகையில் அனேகமாக புதன் கிழமைகளில் நடைபெறுகின்றன.

அன்றைய நிகழ்ச்சி நிரல் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் இறுதி முடிவுகளால் நிர்ணயிக்கப்படுகின்றது. அமைச்சரவைக் கூட்டங்களில் அனைத்து அமைச்சர்களும் கலந்து கொள்ள முடியும். மேலும் இக் கூட்டங்களில் அரசு செயலாளரும், ஜனாதிபதியின் செயலரும் கலந்து கொள்வர்.

ஐந்தாவது குடியரசுத்தலைவர் சார்ள்ஸ் து கோல் (Charles de Gaulle) காலத்தில் 1958ம் ஆண்டிலிருந்து இவ்வாறான அமைச்சரவைக் கூட்டங்கள் வாராந்தம் இடம்பெற்று வருகின்றன.




1969ம் ஆண்டிலிருந்து எலிசே மாளிகையின் நிலத்தளத்தில் உள்ள "முறா" (Murat) மண்டபத்தில் இக்கூட்டத்தொடர் இடம்பெறுகின்றது.



இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு



# அகதிகளின் வருகையால் திக்குமுக்காடும் ஐரோப்பா




கடந்த சில வாரங்களாக ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் வெளிநாட்டு அகதிகளின் வருகையினால் செய்வதறியாது திகைத்துப் போய் நிற்கின்றன. இத்தாலி ஊடாக ஐரோப்பாவுக்கு அகதிகள் வருவது கடந்த சில வருடங்களாகத் தொடர்ந்து இடம் பெற்று வந்த போதும் அண்மையில் ஏற்பட்டுள்ள அகதிகள் வெள்ளம் ஐரோப்பாக் கண்டத்தையே ஒரு ஆட்டம் காண வைத்துள்ளது.

பிரான்ஸ் மக்கள் மத்தியில் ஆரம்பத்தில் அகதிகளை ஏற்பது தொடர்பான எதிர்க் கருத்துகள் காணப்பட்ட போதும் தற்போது பெரும்பான்மையோர் அவர்களை ஆதரித்து அரவணைக்கத் தொடங்கியுள்ளனர். அதே வேளை அரசியல் கட்சிகள் அகதிகள் வரவை மூலதனமாக்கி லாபம் சம்பாதிக்கவும் முயற்சிக்கின்றன.

கடந்த வருடம்(2014) ஐரோப்பா வந்த அகதிகள் எண்ணிக்கை 170 100 என ஐ.நா. குறிப்பொன்று தெரிவிக்கிறது. இவ்வாண்டு அது பல பத்து மடங்குகளாக அதிகரிக்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது. முதலாவது நடவடிக்கையாக இங்கு வந்த அகதிகளில் ஜேர்மனி 40206 பேரையும் பிரான்ஸ் 24031பேரையும் ஸ்பெயின் 19219பேரையும் பொறுப்பெடுத்துக் கொள்வதாக அறிவித்துள்ளன.

ஆப்கான்–ஈராக் நாடுகளில் ஆரம்பிக்கப்பட்ட படையெடுப்புகள் அதனைத் தொடர்ந்து ஆபிரிக்க அரபு நாடுகளில் ஏற்பட்ட உள்நாட்டுக் கிளர்ச்சிகள் ஆட்சி மாற்றங்கள் குறிப்பாக சிரியா நாட்டின் கிளர்ச்சி ஆங்காங்கே அந்தந்த நாடுகளில் உருவான பயங்கரவாத அமைப்புகளின் நடவடிக்கைகள் யாவும் சேர்ந்து கடந்த பல வருடங்களாக அகதிகளை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.

கடந்த மூன்று வருடங்களாக இத்தாலி நாட்டுக்கு (பல்லாயிரக்கான மக்களைக் கடலில் பலிகொடுத்துத் தப்பி) வந்தோர் பெரும்பாலும் ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்தவர்களே. இவர்களுள் ஓரளவு அரபு நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்

இந்தப் பின்னணியில்தான் கடந்த ஒரு வருட காலமாக ஈராக் – சிரியா நாடுகளுக்கிடையில் பயங்கரவாத அமைப்பொன்றினால் ஈராக் சிரியா இஸ்லாமியக் குடியரசு (Islamic State of Iraq and Syria - ISIS) ஸ்தாபிக்கப்பட்டுப் படிப்படியாக அது ஈராக்–சிரியா நாடுகளின் நிலப்பரப்புக்களை மேலும் மேலும் தொடர்ந்து கைப்பற்றி வருகிறது. இந்த கைப்பற்றுதலின் போது (ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் கலாச்சார அமைப்பு- UNESCO) "யுனெஸ்கோ"வினால் உலக பாரம்பரிய சின்னமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள (சிரியா)வரலாற்றுச் சான்றான பனை ஸ்தலச்(Site of Palmyra ) சின்னங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஈராக்–சிரியா நாட்டுக் கிறிஸ்தவர்கள் பாரியளவில் கொல்லப்பட்டும் வருகின்றனர்.

சர்வதேச சட்டங்களின் கீழ் இச்சின்னங்கள் அழிக்கப்படுவது யுத்தமீறல் குற்றமாகும். எனவே ஐ.நா.சபையின் ஆணையின் கீழ் இப்பிராந்தியத்தில் சர்வதேச விமானப் படைகளின் தாக்குதல்கள் விரைவில் ஆரம்பிக்கப்படக் கூடிய சாத்தியங்கள் அதிகமாகக் காணப்படுகிறது. இதனை முன்கூட்டியே உணர்ந்து ஈராக்–சிரியா மக்கள் பாரிய அளவில் உயிர்ப் பாதுகாப்புத் தேடிப் புறப்படுவதால் ஏற்பட்ட விளைவே அண்மைய ஐரோப்பிய அகதிகள் நெருக்கடியாகும்.

(அழகிரி)

## நாவற்குழி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம்



பிரான்ஸ் நாட்டிற்கு வருகை தந்த யாழ்.நாவற்குழி மகா வித்தியாலயத்தின் முதல்வர் திருமதி. வ. மேகலிங்கம் (வசந்தாதேவி) அவர்களுடனான கலந்துரையாடலும் பிரான்ஸ் தேசத்துக்கான பழைய மாணவர் சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டமும் 31.08.2015 திங்கட்கிழமை பாரிசில் நடைபெற்றது.

பாரிஸ் லாச்சப்பலில்

# கோபால் அன் கோ

# GOPAL & CO

வாடிக்கையாளர் வசதி கருதி ....

**லாச்சப்பலில்...**

**72, Rue Louis Blanc,**
**75010 Paris.**
M°: La Chapelle

**பொபினியில்...**

**205, AV. JEAN JAURES,**
**93000 BOBIGNY.**
Tram 1: La Ferme

**இலங்கை இந்தியாவிற்கு மிகக் குறைந்த விலையில் கதைப்பதற்கு *Kish Mobile!***




**Tél : 09 51 56 76 52 Fax : 01 46 07 13 03**




# பிரான்ஸ் முகம் கொடுக்கும் ரஷ்ய போர்க்கப்பல் பிரச்சினை!

**யுக்ரேனில்** இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் ரஷ்யாவின் நிலையும் அவர்கள் வகித்த பாத்திரமும் உலகம் அறிந்ததே. உலகநாடுகளையும் ஐரோப்பிய யூனியனையும் பொருட்படுத்தாது செயற்பட்ட ரஷ்ய அதிபர் பூட்டினுக்கும் ரஷ்யாவுக்கும் எதிராக ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரத் தடையை விதித்தது.

இவற்றின் நீட்சியாக பிரான்சும் தன்பங்கிற்கு 2011ம் ஆண்டு கையொப்பமிடப்பட்ட இரண்டு போர்க்கப்பல்களுக்கான கட்டுமான ஒப்பந்தங்களை இரத்துச் செய்துள்ளது. 2011ல் நிக்கோலா சார்க்கோசியினால் கையொப்பமிடப்பட்ட ஒப்பந்தம் 2014ல் முதலாவது போர்க்கப்பல் முற்றிலுமாக கட்டி முடிக்கப்பட்ட நிலையிலும் இரண்டாவது கப்பல் கட்டுமானத்தில் இருக்கும்போதும் அதிபர் பிரான்சுவா ஹொலந்தினால் நிறுத்தப்பட்டது.

இதை ஒரு போதும் அனுமதிக்க முடியாது என ரஷ்யா பிரான்சுக்கு எதிரான பல பொருளாதார நலன்களை ரத்துச் செய்தது. அத்துடன் போர்க்கப்பல்கள் ஒப்பந்தப்படி கால இடைவெளிகளில் வந்து சேராவிட்டால் தாங்கள் கொடுத்த தொகையிலும் பார்க்க இரண்டு மடங்கு அபராதம் செலுத்தவும் கோரியிருந்தனர். கடந்த ஒரு வருடமாக நீண்ட பேச்சுவார்த்தைகள் தற்போது சுமூகமான ஒரு தீர்வுக்கு நகர்த்தப்பட்டுள்ளது. அபராதத் தொகைகளை ரத்து செய்த ரஷ்யா தாங்கள் கட்டுமானத்திற்காக கொடுத்த 1.2 மில்லியாட் யூரோக்களை மட்டும் திரும்பப் பெறச் சம்மதம் தெரிவித்துள்ளது. நவம்பர் மாதத்திற்கு முன்னர் பிரான்ஸ் இத்தொகையை ரஷ்யாவிடம் கையளிக்க வேண்டும்.

மூன்று வருட உழைப்பிலும் செலவிலும் உருவான இரண்டு போர்க்கப்பல்களும் Saint Nazaire கடலில் மிதந்த வண்ணம் உள்ளன. தற்போது பராமரிப்புச் செலவுகள் மட்டும் 2.5 மில்லியன் முதல் 5 மில்லியன் வரை நீள்கிறது.

## பிரான்ஸ் நாட்டவர் அதிகம் விரும்பும் 20யூரோ




ஐரோப்பிய ஒன்றிய உருவாக்கத்தின் பின்னர் 1999 ம் ஆண்டு ஐரோப்பிய பொது நாணயமான யூரோ தோற்றம் பெற்றது. பிரான்சில் மட்டும் சில்லறையாகவும் தாள்களாகவும் 111 மில்லியாட் யூரோக்கள் பாவனையில் உள்ளதாக Banque de france தெரிவிக்கிறது. வங்கி அட்டைகள், தொடுகையற்ற பணம் செலுத்தும் முறை என புதிய வழிகள் வந்துவிட்டாலும் பணத்தைச் சட்டைப்பைகளில் வைத்துச் செலவழிப்பதையே பிரான்ஸ் நாட்டவர் விரும்புவதாகவும் தெரிவித்துள்ளது.

ஒரு பிரான்ஸ் நாட்டவர் சராசரியாக 42 யூரோக்களை தமது கைப்பைகளில் வைத்திருப்பதாகவும் பெரிதும் விரும்பி உபயோகிப்பது 20 யூரோ அல்லது 10 யூரோ தாள்களைத்தான் எனவும் அறிக்கை குறிப்பிடுகிறது. பிரான்சில் பாவனையிலுள்ள யூரோக்களில் 20 யூரோ 52 சதவீத இடம் வகிக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# எனது பெயரை எனது மகளுடன் பகிர வெட்கப்படுகிறேன் !

- ஜோன் மறி லு பென்

**தீவிர** வலதுசாரிக்கட்சியான தேசிய முன்னணியின் (Front National) ஸ்தாபகரும், ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினருமான ஜோன் மரி லுபென் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

1972 ல் ஆரம்பிக்கப்பட்ட தேசியமுன்னணியின் தலைவராக ஜோன் மரி லுபெனைத்தொடர்ந்து அவரது மகளான மரீன் லுபென் 2011 முதல் செயற்பட்டுவருகிறார். அண்மைக்காலமாக தகப்பனுக்கும் மகளுக்கும் இடையே நிலவிவந்த முரண்பாடுகள் நீதிமன்றம் வரை சென்றன. கடந்த மேமாதம் கட்சியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தார். அதைத் தொடர்ந்து 20 ஓகஸ்ற் நடைபெற்ற கட்சிக்காங்கிரஸ் கூட்டத்தில் கட்சியிலிருந்து முழுமையாக நீக்கப்பட்டார். அவரை அவர் கட்சியின் கௌரவத் தலைவராக செயற்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது.

கட்சித்தடையை நீக்கும்படி லு பென் நீதிமன்றத்தில் போட்டிருந்த வழக்கு யூலை 2 இல் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் தற்போது லு பென் கட்சியில் இருந்து முழுமையாக நீக்கப்பட்டுள்ளார்.





## 2050ல் உலக சனத்தொகை 1000 கோடி !


தற்போது 7.3 மில்லியாட் (730 கோடி) மக்களைச் சுமந்துகொண்டிருக்கும் பூமிப்பந்தானது 2050ம் ஆண்டில் 10 மில்லியாட் (1000 கோடி) மக்களைச் சுமக்கவேண்டியிருக்கும். இத்தகவலை பிரான்ஸ் குடிசனக் கணக்கீட்டு ஆய்வு நிறுவனம் (Institut français d'études démographiques) (INED) தருகிறது. INED நிறுவனம் இரண்டுஆண்டுகளுக்கொருமுறைமேற் கொள்ளும் ஆய்விலேயே இத்தகவல் பெறப்பட்டது.

மக்கள் தொகை வளர்ச்சியில் 2050ம் ஆண்டில் சீனாவை பின்தள்ளிவிட்டு இந்தியா முதலாம் இடத்திற்கு வந்துவிடும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. இந்தியாவில் கருத்தரிப்பு வீதம் அதிகரிக்கின்றமையே இதற்கு காரணமாக சுட்டப்படுகின்றது. இந்தியா, சீனா போன்ற நாடுகளிற்கு அடுத்ததாக கருத்தரிக்கும் வீதம் நைஜீரியாவில் அதிகமாக காணப்படுகிறது. பிரெஞ்சு நிறுவனத்தின்கணிப் பின்படி மக்கள் தொகையில் நைஜீரியா மூன்றாவது இடத்திற்கு வந்துவிடும் வாய்ப்புள்ளது.

2050ம் ஆண்டில் பிரான்சின் சனத்தொகை 7.2 கோடியாக உயரும். அவ்வேளையில் பிரித்தானியாவில் மக்கள் தொகை 7,7 கோடியாவதுடன் ஐரோப்பாவில் அதிக மக்களைக் கொண்ட நாடாகவும் திகளும்.

INED 1945ம் ஆண்டில் அமைக்கப்பட்ட அரச நிறுவனமாகும்.





## சிக்னல் விளக்கு

**பிரான்சில்** வாகனப்போக்குவரத்து அதிகமானதொரு நாற்சந்தியில் சிக்னல் விளக்கொன்று பழுதடைந்தால் ஒரு சில நிமிடங்களில் நூற்றுக்கும் அதிகமான விபத்துகள் பலமணி–நேர வாகன நெரிசல், ஏன் பல மரணங்களைக் கூட ஏற்படுத்தும் அபாயம் உள்ளது.

மின்சாரத்தில் இயங்கும் சிக்னல் விளக்குகள் தோற்றம் பெற்று 2015ம் ஆண்டு ஆகஸ்ட் 05ம் திகதியோடு 101 வருடங்களாகின்றன.

உலகின் முதலாவது மின்சாரத்தில் இயங்கும் சிக்னல் விளக்குகள் 1914ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் திகதி அமெரிக்காவில் ஓகியோ (Ohio) மாநிலத்தில் கிளீவ்லண்ட (Cleveland) நகரில் நிறுவப்பட்டது.

வரலாற்றில் சிக்னல் விளக்குகள் தொடர்பான தகவல்கள் பெரிதும் இல்லாவிடினும் முதலாவது சிக்னல் விளக்குகளின் பாவனை 1868ல் லண்டன் மாநகரில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விளக்குகள் எரிவாயுவில் இயங்கியுள்ளன.

பிரான்சில் முதலாவது மின்சக்தியில் இயங்கும் சிக்னல் விளக்குகள் அமெரிக்காவில் நிறுவப்பட்டு 10 வருடங்களுக்குப் பின்னராக 1923ம் ஆண்டு மே 5ம் திகதி நிறுவப்பட்டது. இது பிரான்சின் முக்கிய கண்டுபிடிப்பாளர்களில் ஒருவரான Léon Foenquinos ஆல் அறிமுகப்படுத்தப்பட்டது. Boulevard Sébastopol, Saint-Denis சந்தியில் ஒரு சிகப்பு விளக்கும் எச்சரிக்கை மணியும் 1923ல் நிறுவப்பட்டது. மூவர்ண விளக்குகளின் வருகை மேலும் பத்து வருடங்களின் காத்திருப்புகளின் பின்னரே சாத்தியமானது.

# ஐரோப்பிய ஒன்றியத்தில் பிரித்தானியா தொடருமா?




இங்கிலாந்து தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திருக்க 43 வீதமானோர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

எதிர்ப்புகளைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இருப்பது தொடர்பான வாக்கெடுப்பு 2017 டிசம்பரிற்கு முன்பாக நடாத்த பிரிட்டன் திட்டமிட்டுள்ளது.

வாக்கெடுப்பு "ஆம்" அல்லது "இல்லை" என வாக்களிக்கப்படும் நிலையில் முடிவு தேர்தல் ஆணைக்குழுவால் நிர்ணயிக்கப்படும். 40 வருடங்களிற்கு முன்பாக 1975ம் ஆண்டில் பிரித்தானியா தேர்தல் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்கான ஒப்புதல் பெறப்பட்டது. ஒன்றியத்தில் இணைந்திருப்பதன் மூலம் பிரிட்டன் வர்த்தகப் பரிமாற்றத்தில் சிறப்பாக இயங்க முடியும் என பிரித்தானியாவின் பெரும்பான்மையான வர்த்தகர்கள் நம்புகின்றனர். இல்லையெனின் 28 ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடனும் ஒவ்வொன்றிற்கும் பேச்சுவார்த்தை நடாத்தவேண்டிய நிலை இருக்கும் என அவர்கள் குறைப்படுகின்றனர்.


எனினும் தற்போதைய பிரித்தானிய பிரதமர் டேவிட் கமறோன் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திருப்பதையே விரும்புகிறார். அதேவேளையில் 55 வீதமான வர்த்தகப்புள்ளிகள் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்திருக்கவும் ஆதரவு தெரிவிக்கின்றனர்.

தேர்தல் முடிவு ஒன்றியத்திற்கு எதிராக இருக்கும்பட்சத்தில், அது ஐரோப்பிய ஒன்றியத்திற்குப் பாதகமாகவே அமையும்.






# உடல், உள ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும் செயற்கை உணவு உற்பத்திகள்




விவசாயத்தில் மரபணு மாற்று வேளாண்மை, செயற்கை உரம், செயற்கை வளர்ச்சி ஊக்குவிப்பு மருந்துகள், களைகொல்லிகள் என கண்ணுக்கு கவர்ச்சியான விளைபொருட்கள் உற்பத்தி 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்தே நடைபெற்று வருகிறது. இம்முறைகள் உலகசுகாதார நிறுவனங்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் பல்கிப்பெருகிவரும் மனுக்குலத்தின் தேவைகளின் அடிப்படையில் கடுமையான கட்டுப்பாடுகளுடன் அனுமதிக்கப் பட்டுள்ளன.

ஆயினும் சில செயற்கை முறைகள் தற்போது கட்டுக்கடங்காமல் கைமீறும் நிலை ஏற்பட்டுள்ளதால் ஐரோப்பிய பாராளுமன்றம் சில இறுக்கங்களை நடைமுறைப்படுத்த ஆரம்பித்துள்ளது. மரபணு மாற்றப்பட்ட சோள வேளாண்மைக்குத் தடை, பல பூச்சிக்கொல்லி மருந்துகள் ஐரோப்பிய விளைநிலங்களில் உபயோகிக்கத்தடை எனத் தடைஉத்தரவுகளைப் பிறப்பித்தது.

இவற்றின் தொடர்ச்சியாக அண்மையில் விலங்குகளின் உயிரியல் குளோனிங் முறை உருவாக்கத்திற்கும் ஐரோப்பியப்பாராளுமன்றம் முழுமையான தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது. உணவுத்தேவையை முன்வைத்து ஐந்து வகை வளர்ப்பு மிருகங்களை குளோனிங் முறையில் உற்பத்தி செய்வதற்கான அனுமதி கோரப்பட்டிருந்தது. சில ஆரம்பகட்ட சோதனைகளும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இவற்றைப் பரிசீலனை செய்த பாராளுமன்றம் ஐரோப்பிய உணவு பாதுகாப்பு ஆணையத்தின் நேரடி இடையீட்டின் அடிப்படையில் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது. விலங்குகள் குளோனிங் செய்யப்பட்டு அவற்றிலிருந்து பெறப்படும் உணவு வகைகளை மனிதர் உண்பதால் உடல் நலத்துக்கு மட்டுமல்ல மன ஆரோக்கியத்துக்கும் கேடு விளைவிக்கும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

உடல் மன நலத்துக்குத் தீங்கான இத்தகைய விவசாய மற்றும் குளோனிங் முறைக்கு இயற்கை ஆர்வலர்கள் தொடர்ந்து கடும் எதிர்ப்பையே தெரிவித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பேசாதே!

ஏழைக்கு முன்னால் நின்று உனது
செல்வம் பற்றி பேசாதே!

நோயாளிக்கு முன்னின்று உன்
ஆரோக்கியம் பற்றிப் பேசாதே!

மகிழ்ச்சி இழந்தவனுக்கு முன்னின்று
சந்தோஷம் பற்றிப் பேசாதே!

குழந்தைப் பாக்கியமற்றவருக்கு
முன்னின்று
உன் குழந்தைகளைப்பற்றிப்பேசாதே!


அனாதைக்கு முன்னின்று உன்
தந்தை பற்றிப் பேசாதே!

அவர்களது காயங்களை அவர்களால்
அதற்குமேல் சுமக்கமுடியாமல் போய்விடும்.

## வாழ்த்தும் நன்றியும்

பெரியகட்டு அந்தோனியார் கோயில் குருவானவர் பெனோ அலெக்ஸாண்டர் அவர்களின் பிரான்ஸ் வருகையின்போது மன்னார் மாவட்ட அபவிருத்திச் சபை அங்கத்தவர்கள் 20.09.2015ல் ஒன்றுகூடி தமது வாழ்த்தையும் நன்றியையும் தெரிவித்தனர்.

# 560000 வருடங்கள் தொன்மையான மனிதப்பல்



பிரான்ஸ் தொல்பொருள் ஆய்வாளர்கள் மனிதனின் ஆரம்பம் தொடர்பான ஆராய்ச்சிகளை நீண்டகாலமாகத் தொடர்ந்து வருகின்றனர்.

இம்முறை மைல்கல்லாக Pyrénées மலைத்தொடரில் அமைந்துள்ள Tautavel அகழ்வாராய்ச்சி மையத்தில் 560000 வருடங்கள் பழமையான மனிதனின் பல் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர். இது ஒரு மிக முக்கியமான கண்டுபிடிப்பாக ஆய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரையான, மனிதன் தொடர்பான ஆராய்ச்சிகளில் கண்டெடுக்கப்பட்ட மனிதத் தொல்பொருட்களில் இந்தப்பல்லே மிகவும் தொன்மையானதாகும். இதே Tautavel அகழ்வாராய்ச்சியில் தான் 450000 வருடங்களுக்கு முன்னரான மண்டை ஓடு கண்டெடுக்கப்பட்டு மனிதனின் தொன்மையான வடிவம் நிரூபிக்கப்பட்டது.

Tautavel கடந்த 50 வருடங்களாக உயிரினங்களின் ஆரம்பம் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. இன்னும் பல தொல்பொருட்கள் இந்த மையத்தில் கண்டெடுக்க இன்னும் வாய்ப்புகள் உள்ளதாக அறியப்படுகிறது. அவ்வாறு கண்டுபிடிக்கப் படின் அது 690000 வருடங்களுக்கு முன்னர் மனிதன் வாழ்ந்தான் என்பதை நிரூபிக்கும். அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் நாம் இதுவரை அறிந்து வைத்துள்ள மனிதனின் தோற்றம் தொடர்பான நம்பிக்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் எனத் தொல்பொருள் ஆராய்ச்சி வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் குரங்கிலிருந்து தோன்றிய மனிதர்களாகிய எமது மூதாதையர் ஐரோப்பியரா? அல்லது ஆபிரிக்கரா? என்ற நீண்டகால விவாதத்துக்கு விடைகள் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளனர்.


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

எங்கள் 15 வருட கால அனுபவம் உங்களுக்கான நிறைந்த சேவையை வழங்குகிறது!

# Autre Vue

## OPTICIEN

*Donnez un sens à votre Regard*

Jusqu'à 40% Sur les Montures optiques*
25% Sur les Solaires*

*voir conditions au magasin

## பாரீஸ் மாநகரில் தமிழ் மக்களின் நன்மை கருதி இளைய தலைமுறையின் புதியதோர் உதயம்

சிறியோர் முதல் பெரியோர் வரை சகலவிதமான நவீனரக மூக்குக்கண்ணாடிகள், லென்ஸ் வகைகள் மேலும் பலவிதமான நவீன கோடைகாலக்கண்ணாடி வகைகள் சர்வதேச தரமானதாகவும் மலிவானதாகவும் உங்கள் விருப்பம் போல் தெரிவு செய்து பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே நம்பிக்கையான தமிழர் நிறுவனம் Autre Vue அத்துடன் உங்களுக்கான இலவச ஆலோசனைகள் எப்பொழுதும் வழங்கப்படும்.


**உங்களது தேவை ! எங்களது சேவை !**





Autre Vue

23 rue lamartine - 75009 Paris
Tél / Fax: 01 53 20 04 10
09 67 33 12 83
email: autrevueparis09@gmail.com



# பிரான்சின் தொழில்துறை அமைச்சராக 37 வயதேயான Myriam El Khomri !



பிரான்சின் மிகப்பழுவான சிக்கலான அமைச்சு, சோசலிசக்கட்சியின் மிக இளவயது அமைச்சரின் தோள்களில் இறங்கியுள்ளது.

இன்று வரை மூத்த பழுத்த அரசியல் வாதிகளின் தலைமையில் செயற்பட்டு வந்த அமைச்சு François Rebsamen, Dijon மாநகரசபைத் தலைவராக தெரிவானதை அடுத்து இவரின் கைகளிற்கு வந்துள்ளது.

பிரான்சில் தொழில்துறை அமைச்சு என்பது வெறுமனே தொழில்துறையை மட்டும் நிர்வகிப்பது அல்ல. மாறாக வேலைவாய்ப்பு, தொழிற்சங்கங்கள், தொழிற்துறைப்பயிற்சி எனப் பல சமூகப் பொறிமுறைகளை நிர்வகிப்பதாகும். மாதாந்தம் வேலைவாய்ப்பு மையத்தினரால் (Pole Emploi) வேலைவாய்ப்பற்றோரின் தொகை சமர்ப்பிக்கப்படும் நாள் தொழிற்துறை அமைச்சின் ஒரு முக்கிய நாளாகும். பிரான்சில் தொடர்ந்தும் ஏறுமுகத்தையே காட்டி வரும் வேலையற்றோர் பிரச்சினைக்கான தீர்வுகளை முன் வைக்க வேண்டியது இவரின் கடமையே. 2017 அதிபர் தேர்தலில் மீண்டும் அதிபர் பிரான்சுவா ஹொலந் போட்டியிட வேண்டுமாயின் அந்தப்பாதையை செப்பனிட வேண்டியதும் இவரின் கடமையே. புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் அதீத வேலையற்றோர் தொகையை கட்டுக்குள் கொண்டு வரவேண்டிய தலையாய பொறுப்பு தற்போது இளம் அமைச்சரின் தலையில்.

இவ்வாறான ஒரு இக்கட்டான தருணத்தில் எனது தலைமையில் தரப்பட்டுள்ள மிக மிக ஆபத்தான இப்பொறுப்பினை நான் செவ்வனே சீரமைத்துக்காட்டுவேன் என அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தகப்பன் மொறோக்கோவையும், தாய் பிரான்சையும் சேர்ந்தவர்கள். பிரான்ஸ் அமைச்சரவையில் கல்வி அமைச்சர் Najat Vallaud-Belkacem கலாச்சாரத்துறை அமைச்சர் Fleur Pellerin ஐத் தொடர்ந்து மூன்றாவது இளமையான அழகான வெளிநாட்டவர் என எழுந்த சர்ச்சைகளுக்கு எனது பிறப்பைப் பற்றி விமர்சிக்கத் தேவையில்லை. எனது செயற்திறனை வேண்டுமானால் விமர்சியுங்கள் எனத் தெளிவாகத் உறுதிபடப் பதிலளித்துள்ளார் அமைச்சர் Myriam El Khomri.




# துயர் பகிர்வு

வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்



அமரர்
செந்திவேல் திவாகரன்
(யாழ்ப்பாணம்)
தோற்றம் : 27. 06. 1997
மறைவு : 18 . 06. 2015



அமரர்
தயாளினிதேவி பார்த்தீபன்
(சுன்னாகம், பிரான்ஸ்)
தோற்றம் : 11. 04.1969
மறைவு : 07. 08. 2015

அமரர்
பரமநாதன் நிமலதாசன்
(சண்டிலிப்பாய், பிரான்ஸ்)
தோற்றம் : 01. 05. 1974
மறைவு : 04. 07. 2015



அமரர்
அருளம்பலம் கந்தசாமி
(சித்தங்கேணி)
தோற்றம் : 22. 04. 1930
மறைவு : 10. 08. 2015





அமரர்
கொலஸ்திக்கா யேசுதாசன்
(யாழ். பாஷையூர்)
தோற்றம் : 13. 10. 1948
மறைவு : 13. 07. 2015



அமரர்
மனோன்மணி தியாகராசா
(யாழ். நாரந்தனை)
தோற்றம் : 25. 07. 1924
மறைவு : 16. 08. 2015

அமரர்
கனகசபை செல்வராசா
(புங்குடுதீவு)
தோற்றம் : 10. 06. 1955
மறைவு : 17. 07. 2015



அமரர்
ஆறுமுகம் குணரட்ணம்
(வேலணை மேற்கு, பிரான்ஸ்)
தோற்றம் : 29. 09. 1940
மறைவு : 01. 09. 2015





அமரர்
யோவான் ஸ்ரீபன்
(பாஷையூர், பிரான்ஸ்)
தோற்றம் : 19. 11. 1952
மறைவு : 23. 07. 2015




அமரர்
பாக்கியமுத்து உமைநாதன்
(வட்டுக்கோட்டை, பிரான்ஸ்)
தோற்றம் : 23. 11. 1938
மறைவு : 02. 09. 2015

அமரர்
வேலுப்பிள்ளை விஜயரத்தினம்
(கரவெட்டி, பிரான்ஸ்)
தோற்றம் : 20. 06. 1957
மறைவு : 24. 07. 2015



அமரர்
கனகதம்பிராஜா பிறையாளன்
(சித்தங்கேணி, லண்டன்)
தோற்றம் : 10. 11. 1972
மறைவு : 03. 09. 2015





அமரர்
வைத்திலிங்கம் கோபாலகிருஸ்ணன்
(நெடுந்தீவு, பிரான்ஸ்)
தோற்றம் : 28. 02. 1953
மறைவு : 02. 08. 2015



அமரர்
வேலுப்பிள்ளை கோணேசராசா
(திருகோணமலை, பிரான்ஸ்)
தோற்றம் : 26. 06. 1968
மறைவு : 03. 09. 2015

அமரர்
மயில்வாகனம் திருப்பதிபிள்ளை
(வட்டுக்கோட்டை, பிரான்ஸ்)
தோற்றம் : 02. 07. 1922
மறைவு : 04. 08. 2015



அமரர்
ஐயாக்குட்டி பாலசிங்கம்
(ஏழாலை மயிலணி, மயிலங்காடு)
தோற்றம் : 19. 06. 1944
மறைவு : 04. 09. 2015





அமரர்
குணநாயகம் பென்ஜமின்
(யாழ்ப்பாணம், பிரான்ஸ்)
தோற்றம் : 03. 03. 1946
மறைவு : 21. 08. 2015



அமரர்
வைத்திலிங்கம் நாகம்மா
(இருபாலை, திருநெல்வேலி)
தோற்றம் : 02. 01. 1935
மறைவு : 17. 09. 2015

## உதவி இடைநிறுத்தம்!

Seine-Saint-Denis (93) மாணவர்களில் CM2 வகுப்பிலிருந்து சித்திபெற்று 6ème (collège) செல்வோருக்கு "வெற்றிக் காசோலை" வழங்குவதாக மாநகரசபை ஆலோசனைக் குழு அறிவித்திருந்தது. 200 யூரோ பெறுமதியான இக்காசோலை பாடசாலை உபகரணங்கள் வாங்குவதற்கென அறிவுறுத்தப் பட்டிருந்தது. இக்காசோலையால் 93 நகரப் பகுதியில் வாழும் அரச பாடசாலைகளுக்கு செல்லும் 18 ஆயிரம் மாணவர்கள் பயன் அடைய இருந்தனர். அனுமதி வழங்கப்பட்ட இத்திட்டம் தற்போது இடைநிறுத்தப் பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பாரபட்சம் உள்ளது. தனியார் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் தவிர்க்கப்பட்டுள்ளனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு இடைநிறுத்த உத்தரவு பெறப்பட்டுள்ளது. இவ் இடைநிறுத்த உத்தரவை 93 நகரசபை ஆலோசனைக்குழுவின் வலதுசாரிக் கட்சி உறுப்பினர்கள் நீதிமன்றம் மூலம் பெற்றுள்ளனர்.

தற்போது இத்திட்டம் நீதிமன்ற உத்தரவிற்காக காத்திருப்பிலுள்ளது. ஒதுக்கப்பட்ட 3,2 மில்லியன் யூரோக்கள் ஒதுக்கப்பட்டது தான். இக்காசோலை காத்திருக்கும் 18 ஆயிரம் குடும்பங்களையும் சென்றடைய ஆவன செய்வேன் என ஆலோசனைக்குழுத் தலைவர் Stèphane Troussel தெரிவித்துள்ளார்.

மன நிறைவோடு
வாழவேண்டும் என்பது
நமக்கு இயற்கையாக
கிடைத்த செல்வம்.

ஆடம்பரமாக
வாழவேண்டும் என்பது
நாமே தேடிக்கொள்ளும்
வறுமை!



# SUPER MARIO

## 30 வது வருட த்தில்..

**தற்போது** "வீடியோகேம்கள்" முப்பரிமாணம், மெய்நிகர் எனத்தனது உச்சநிலையைத் தொட்டுவிட்டாலும், ஆரம்பகாலமான 1985 முதல் இன்று வரை தவிர்க்கமுடியாத நாயகன் என்றால் Mario தான்.

ஜப்பானைச் சேர்ந்த நின்ரன்டோ (Nintendo) நிறுவனம் 1985ம் ஆண்டு தனது முதலாவது வீடியோ விளையாட்டை வெளியிட்டது. அந்த விளையாட்டின் நாயகன் தான் Mario . கடா மீசை, தொப்பி, நீலத்தொழிலாளி உடுப்பு என உருவாக்கப்பட்ட ஒரு கற்பனை நாயகன். கற்பனை தான் என்றாலும் Mario வில் ஒரு இத்தாலிய அமெரிக்கன் தோரணை தெரிவதைத் தவிர்க்க முடியாது.

இன்று மிக்கிமௌஸ், டிஸ்னி ஆகியவற்றிற்கு நிகரான பிரபலம் Mario விற்கும் உண்டு. இன்று வரை 720 மில்லியன் விளையாட்டுகள் விற்றுத்தீர்ந்துள்ளன. இன்றைய திகதியில் நின்ரன்டோவின் இறுதி வரவான Wii ல் கூட Mario வின் அதகளம் நின்றபாடாகவில்லை. ஜப்பானில் முதலிடத்திலும் அமெரிக்காவில் இரண்டாவது இடத்திலும் தொடர்ந்து வீடியோ கேம் உருவாக்கத்தில் இருந்து வரும் நின்ரன்டோ நிறுவனம் தமது தனித்துவமான நாயகனுக்கு பிரமாண்டமான விழா எடுத்துக் கௌரவித்துள்ளது

### கிளிநொச்சி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம்

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய பழையமாணவர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் 23.08.2015 அன்று பாரிசில் நடைபெற்றது.

**பொன்மொழி**



**எதுவுமே செய்யாமல் வீணாகும் வாழ்க்கையைவிட, எதையாவது செய்யும்போது ஏற்படும் தவறுகள் மிகவும் பயனுள்ளதும், கண்ணியமானதும் கூட.**

**- ஜார்ஜ் பெர்னார்ட் ஷா**




பிரான்ஸ் நாவாந்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்தும் நல்வாய்ப்புச் சீட்டிழுப்பு 20.09.2015

இளவாலை திருக்குடும்ப கன்னியர்மட மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் 17வது ஆண்டுவிழா இளமாலை 24.10.2015

திருமறைக்கலாமன்றம் பிரான்ஸ் வழங்கும் கலைவண்ணம்
Embarcadere 3, rue Firmini Gémier, 93300 Aubervilliers Bus : 170, 150 arrêt : André Karman
ஞாயிறு மாலை 5.00 மணி
25.10.2015



# பிரான்ஸ் தொலைக்காட்சித் துறையின் பிரபல நட்சத்திர செய்தி வாசிப்பாளரான Claire chazal TF1 தொலைக்காட்சியிலிருந்து வெளியேறுகிறார்.

கடந்த 24 வருடங்களாக வெள்ளி, சனி, ஞாயிறு TF1 செய்தி அறிக்கையென்றாலே பிரான்ஸ் மக்களின் மனதில் அசைக்க முடியாமல் பதிந்துவிட்டவர் claire chazal. கனிவான பார்வையாலும் திருத்தமான உச்சரிப்பாலும் பல மில்லியன் மக்களைத் தொலைக்காட்சிப்பெட்டிக்கு முன்னால் கட்டிப்போட்டவர்.

ஆரம்பங்களில் தொலைக்காட்சிகளில் பெண்கள் வெறும் காட்சிப் பொருட்களாகவே பயன்படுத்தப்பட்டனர். அந்தப்பார்வையை மாற்றியமைத்து கள நிருபராக, செய்தி வாசிப்பாளராக TF1 செய்தித்துறைப் பொறுப்பாளராக தனது தனித்துவத்தை நிரூபித்த ஆளுமை claire chazal.

1991ம் ஆண்டு சிறந்த செய்தி வாசிப்பாளருக்கான விருது, 2004 செவாலியர் விருது (chevalier de la Légion d'honneur), 2009 தங்கப்பெண் விருது எனப்பல விருதுகளுக்குச் சொந்தக்காரர்.

TF1 தொலைக்காட்சியிலிருந்து வெளியேற்றப்படுகின்றாரா அல்லது விலகுகின்றாரா என்ற சர்ச்சைகள் ஒரு புறமிருந்தாலும் 13.09.2015 தனது இறுதிச்செய்தி அறிக்கையில் அதே புன்சிரிப்புடன் தனது இடத்துக்கு வரவிருக்கும் புதிய செய்தி வாசிப்பாளரான Anne Claire Coudray க்கு வாழ்த்துக்கள் சொல்லி விடைகொடுத்துள்ளார்.



Claire chazal




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# WWW.ATHAVANNEWS.COM

ATHAVAN NEWS

## உலகத் தமிழர்களின் உண்மைக் குரல்






- 24 X 7 உடனுக்குடன் செய்திகள்
- மணித்தியாலச் செய்திகள்
- இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் செய்தியாளர்கள்
- நேரடி களநிலைவரங்கள்
- செய்தியும் அவற்றின் பின்னணியும் ~ ஆவணப்படங்கள்
- அரசியல்வாதிகள், பிரபலங்களின் சிறப்புச் செவ்விகள்
- துறைசார் நிபுணர்களின் அரசியல் ஆய்வுக்கட்டுரைகள்
- திரைப்படங்கள், சினிமா, பொழுதுபோக்கு அம்சங்கள்
- அறிவியல், ஆன்மீகம், மருத்துவம்
- சுவாரஷ்யமான தகவல்கள்
- வாழ்வியல் ஆலோசனைகள்




ஆதவனின்
**திசைகள்**
Documentaries

ஆதவனின்
**சிறப்பு பார்வை**

இலங்கைப் பத்திரிகைகளின் கண்ணோட்டம்

**FREE**
- வர்த்தக விளம்பரங்கள்
- துயர் பகிர்வுகள்
- அறிவித்தல்கள்

## விளம்பரத் தொடர்புகளுக்கு

| FRANCE | WEBSITE | E-MAIL |
|---|---|---|
| 097 518 0123 | www.athavannews.com | sales@athavannews.com |



# பிரான்சின் பாரம்பரிய உணவு

பிரான்சிற்கு வரும் உல்லாசப்பயணிகளோ சரி வெளிநாட்டவர்களோ சரி தேடி விரும்பி உண்ணும் முதலாவது உணவு என்றால் அது பாரம்பரிய முறைப்படி செய்யப்பட்ட Baguette de pain தான்.

இந்த Baguette பாண் பிரான்சின் பாரம்பரிய உணவுகளில் ஒன்று என 13 செப்டெம்பர் 1993 ல் பிரகடனப்படுத்தப்பட்டது. 1993ம் ஆண்டு Edouard Balladur பிரதமராக இருந்தபோது இப்பிரகடனத்தை அமுல்படுத்தினார்.

1990 காலப்பகுதியில் பெருவணிக மையங்களால் தொழில்துறை தயாரிப்புகளாக பாண்கள் தயாரிக்கப்பட்டன. அவை பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்படும் Baguette களை இருட்டடித்தன. பாதிப்புக்குள்ளான பிரான்ஸ் பாரம்பரிய பாண் முறையை தக்கவைக்கவே இப்பிரகடனம் நிறைவேற்றப்பட்டது.




Baguette ன் தோற்றம் தொடர்பான சரியான தகவல்கள் இல்லாத போதும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே பிரபல்யமானது. முன்னர் அரை வட்ட பாண் வடிவமே வழக்கத்திலிருந்தது. ஆனாலும் பிரெஞ்சுப் புரட்சிகாலமான 1793 இலேயே Baguette உருவாக்கம் பெற்றுவிட்டது என்ற தகவல்களும் உண்டு. இப்பிரகடனத்தின் 22வது வருடத்தை சிறப்பிக்க Google, Doodle ம் வெளியிட்டுச் சிறப்பித்திருந்தது.

**சமய அறிவுப்போட்டி**

**தமிழ் பிரெஞ்சு மொழிகளில் வினாத்தாள்கள் அச்சிடப்பட்டுள்ளன.**
**நேரிலோ, தபால் மூலமோ வினாத்தாள்களை பெற்றுக்கொள்ளலாம்.**
**போட்டி முடிவு : 11.10.2015**
**மேலதிக விபரங்களுக்கு,**
**ஸ்ரீ அஷ்டலக்சுமி கோவில்**
Choisy-Le-Roi
Tél. : 01.48.52.98.19

**ஐரோப்பியத் தமிழ் ஆய்வியல் மாநாடு**
**- பாரிசு -**
**ஐரோப்பாவில் தமிழ்**
**10-11. ஒக்ரோபர் 2015**
70, rue Philippe de Girard - 75018 PARIS
Tél.: 01 46 07 16 00 / 06 52 66 30 01

**நன்றி நவிலலும் வரவேற்பு விழாவும்**

இலங்கைத்தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் கடந்த 6 வருடங்களாக பணியாற்றிய அருள்பணி லீனஸ் சோசை அடிகளாரின் பணிக்காலம் நிறைவடைந்த நிலையில் புதிய இயக்குனராக அருள்பணி யோசவ் கமலாநந்தன் அடிகளார் வருகை தந்துள்ளார். இவர்களுக்கான நன்றி நவிலலும் வரவேற்பு விழாவும் **01.11.2015** ஞாயிறு தினம் நடைபெறவிருக்கின்றது.




# கைரேகை அடையாளம் சொல்லும் அதிர்ச்சித் தகவல்கள்!



பொலிசாரின் விசாரணைகளில் கைரேகை அடையாளங்கள் பிரதான பங்கு வகிக்கின்றன. நாங்கள் நினைத்துக்கொண்டு இருப்பதற்கு மேலாக தற்போது எங்கள் கைரேகைகள் மிக அதிகமான தகவல்களை வழங்குகின்றன.

ஆள் ஒருவரை அடையாளம் காண கைரேகை துணைபுரிந்தது போய் தற்போது அவர் எதைத் தொட்டார் எதைப்பாவித்தார் என்பதெல்லாம் வெளிவர உள்ளன.

தற்போது பரீட்சார்த்த நிலையில் இருக்கும் இப்புதிய தொழில்நுட்பம் மேலும் புதிய தகவல்களை வழங்க உள்ளது. அமெரிக்காவின் கலிபோர்னியா நகரில் உள்ள அறோஜெ (Arroger) என்ற நிறுவனத்தினால் இந்த தொழில்நுட்பம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தற்போது இது FMID (Fingerprint Molecular Identification) என அழைக்கப்படுகின்றது.

கை விரல்கள் தொடுபட்ட பகுதியின் மீது மாவிலும் சிறிதான இரசாயனப் பொருள் ஒன்றைத் தூவுதல் மூலம் பரிசோதனைக்கூடத்தில் வல்லுனர்கள் பல விடயங்களை அறிகின்றனர்.

ஆய்வின் பின்னர் சம்பந்தப்பட்டவர் ஆணா? பெண்ணா? என அறியவும், போதைப்பொருள் பாவித்தார்களா அல்லது புகை பிடித்தார்களா என்பதெல்லாம் அறியமுடியும். மேலும் ஆயுதம் அல்லது வெடிமருந்து ஏதாவதைத் தொட்டிருந்தார்களா என்பதெல்லாம் தெரியவரும்.

இத்தரவுகள் மூலம் இவர்கள் கொலை ஒன்றில் தொடர்புபட்டிருந்தார்களா? அல்லது உடந்தையாக இருந்தார்களா? என்பதெல்லாம் ஒரு மாதத்துள் வெளிச்சத்திற்கு வந்துவிடும்.

FMID தொழில்நுட்பப் பிரயோகங்கள் வரையறை அற்றவையாக இருக்கப் போகின்றன. மேலும் விமானப் பயணிகள் தங்கள் காத்திருக்கும் இருக்கைகளில் இருக்கும் போதே அவர்கள்மீது ஐயப்பட்டால் சிறுநீர் அல்லது தலை முடியை பரிசோதிப்பதன்மூலம் விமான நிலையத்திலேயே உண்மைகளைக் கண்டறிய முடியும்.

இந்தப் பரிசோதனைகளைச் செய்வதற்கு எந்த அனுமதியும்பெறப்பட வேண்டிய தேவை இருக்காதென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

உன் மனம் ஒன்றே
உன்னை வீழ்த்தக்கூடிய ஒரே ஆயுதம்!
அது தெளிவாக இருக்கும் வரையில்
நீ ஒருவராலும் வீழ்த்தப்படமாட்டாய்!


இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# சாதனைபடைத்த இங்கிலாந்து மகாராணி
# Queen Elizabeth Forever



மகாராணி இரண்டாம் எலிசபெத் சிம்மாசனம் ஏறி 63 வருடங்கள், 7 மாதங்கள், 2 நாட்கள் கடந்துவிட்டன. இது இங்கிலாந்து அரச வரலாற்றுச் சாதனையாகும். இவருக்கு முன்னர் மகாராணி விக்டோரியாவின் ஆட்சிக்காலமே (1837–1901) சாதனையாக இருந்தது.

இங்கிலாந்து மக்களின் உயர் அடையாளமாக திகழ்பவர் மகாராணி எலிசபெத். அவர் தனது காலத்தில் பன்னிரண்டு இங்கிலாந்து பிரதமர்களுடன் நல்லுறவுபேணி நாட்டின் சரியான வழிநடத்தலுக்கும் உறுதுணையாக இருந்துள்ளார், இங்கிலாந்தை ஆட்சி செய்தவர்களில் மக்களால் மிகவும் விரும்பப்படும் மகாராணியும் இவரே என்கிறார் ஆய்வாளர் Stéphane Bern.

இன்று 89 வயதாகும் மகாராணி அவரது 26வது வயதில் 1952ம் ஆண்டு முடிசூட்டப்பட்டார். பிரான்சைப் பொறுத்தவரை பதினான்காம் லூயி மன்னனின் ஆட்சிக்காலமே மிகநீண்ட ஆட்சிக்காலமாகும். சூரியதேவன் என வர்ணிக்கப்படும் பதினான்காம் லூயி 72 வருடங்கள் 3 மாதங்கள் 8 நாட்களும் ஆட்சி புரிந்தார். (14 மே 1643 – 01 செப்டெம்பர் 1715)


## மோகன் ஜீவலரி மார்ட்

28வது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய அதிஸ்ட லாபச்சீட்டிழுப்பில் பரிசில்களை வென்றோர் விபரம்..

11th Prize : MOHAMED RIZWAN SUHOOD
10th Prize : SHANMUGARAJAH JEEVAREKA
9th Prize : ESSA NDOUTOUMOU MATHURIN VIVIEN
8th Prize : MATHYRANCHAN SIVAKUMARI
7th Prize : KATHIRAMU INTHIRANI
6th Prize : KHAN KOBIR
5th Prize : STEEPHEN ANTONY DIAS
4th Prize : KANAPATHY THEVARASAN
3rd Prize : JOSEPH MANUEL YOGARAJAH FATIMARANI
2nd Prize : THANGARAJAH VIJAYARAJAH
And the « **WINNER** « of « **FESTIVAL DE L' OR** « is :
« **NAVARATMAN THARMAPALAN** «

Since 1987


# அழுவதுகூட ஆரோக்கியம்தான்! அழுதுபாருங்கள்!



நம்மில் பலருக்கும் அழுவது அவமானமான செய்கையாகத் தெரிகிறது. பலர் இது பிடிக்காத செயல் என்பர். ஆனால் கண்ணீர் விட்டு அழுவதால் மனமும் உடலும் ஆரோக்கியமடையும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

1.கண்ணீரால் இமைகள் விழிகள் சுத்தமடைகின்றன. பார்வை தெளிவடைகிறது.
2.கண்ணீரிலுள்ள லைசோசோம் கண்ணிலிருக்கும் 90–95 வீதமான பக்டீரியாக்களை அழிக்கிறது.
3.மனம் சோர்வடைந்து துக்கமாக இருக்கும்போது அழுவது மனதின் சோகங்களை கண்ணீராக வெளியேற்றிவிட இதயம் லேசாகின்றது.
4.மனித மனநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் மங்கனீஸ் என்ற வேதிப் பொருள் அழுவதன் மூலம் குறைவதால் உடல் ஆரோக்கியமடைகிறது.
5.இரத்த அழுத்தத்தை சீராக்குகிறது.
6.கண்ணீரினால் முகத்தின் சருமம் கூட துப்புரவாகிறது.

## ● பிரான்ஸ் நாட்டின் விருந்தினர் உபசரிப்பு

முதல் முறையாக வீட்டுக்கு வந்தவர்களென்றால், அவர்களது கோர்டை வாங்கி அதனது இடத்தில் கொழுவுதல் பண்பு. வீட்டுத்தலைவியானவர் மேசைக்கு வருமாறு அழைப்பார். பின் அவரவருக்கான இடத்தை அமருமாறு காட்டுவார்.விருந்துக்கு அழைத்தவரே போர்ன்அப்பற்றி (Bonne appétit )சொல்லி உணவு செமிபாடடைய வாழ்த்துவார். அதற்கு விருந்தினர் மெர்ஸி (Merci) சொல்லவேண்டும். உணவுகள் இடப்பக்கமிருந்தும் டெசேட் (Dessert) வகை வலப்பக்கமிருந்தும் பரிமாறப் படுவது வழக்கம். வாயில் சாப்பாடுடன் கதைப்பதோ கத்தி, கரண்டிகளை ஆட்டிக் கதைப்பதோ நாகரிகமற்றதாகக் கருதப்படும்.ஏப்பம் விட வேண்டிய நிலை தவிர்க்க முடியாமல் ஏற்பட்டு விட்டால் பர்தோன் (pardon)சொல்லி மன்னிப்புக்கேட்பது பண்பான செயலாகும். இறுதியாக விடைபெறும் போது ஒரே பாலினத்தவர்களென்றால் கை குலுக்கியும் எதிர்ப்பாலினத்தவர்கள் என்றால் கன்னங்களுக்கு இரண்டு இரண்டு முத்தங்களாக வழங்கி விடைபெறுவது பிரெஞ்ச் தேசத்தவரின் பழக்கம்.



– நாகரத்தினம் கிருஷ்ணா அவர்களின் பிரான்சு நிஜமும் நிழலும்–5: கட்டுரையிலிருந்து.....

லாச்சப்பலில்!
புதிய சேவைகளுடன்!!

# சங்கீதா அச்சகம்




39, Boulevard de La Chapelle 75010 Paris



# சிரியப்போருக்கு பிரான்சும் தயாராகிறது!

**ஐரோப்பாவில்** நுழையும் சிரிய அகதிகள் நாளாந்தம் ஊடகங்கள் வியாபிக்கும் EI (Etat islamique) பயங்கரவாதிகளின் அப்பட்டமான கொலைகள், இன அழிப்புகள், வரலாற்றுச் சின்னங்களின் உடைத்தழிப்புகள் இன்னும் ஜிகாத் குழுக்களால் கவர்ந்திழுக்கப்படும் பிரான்ஸ் இளைஞர்கள், பிரான்சில் நடந்தேறிய பயங்கரவாதத்தாக்குதல்கள் என பிரான்ஸ் மக்கள் கொதித்துப்போய்த்தான் உள்ளனர்.

சர்வதேச நாடுகளின் நேரடித்தலையீட்டின் மூலம் தான் EI பயங்கரவாதிகளைக் கட்டுக்குள் கொண்டுவர முடியும் எனப் பிரான்ஸ் மக்கள் தீர்க்கமாகத் தெரிவித்துள்ளனர்.

இதுவரை EI மீதான வான் தாக்குதல்களில் மட்டுமே சர்வதேசம் பங்குபற்றுகின்றது. இது போதாது தரைவழித் தாக்குதல்களையும் நடாத்த வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர். இதுவரை சிரியாவில் மட்டும் 260000 மக்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளனர். பல நூறு ஆயிரம் மக்கள் வீதியெங்கும் அகதிகளாக அலைகின்றனர். இப்போர் முற்றுக்கு வரவேண்டும், EI பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இது சிரியர்களுக்கு மட்டுமல்ல மற்றைய நாடுகளுக்கும் பாதுகாப்பாக அமையும்.

சர்வதேசம் நேரடியாக, தரைவழிப் போரில் இறங்கும் பட்சத்தில் பிரான்ஸ் படையணிகளின் பங்களிப்பைப் பிரான்ஸ் மக்கள் விரும்புகிறார்களா என்ற கேள்விக்கு வழமையாக போர் என்றாலே பின்னிற்கும் பிரான்ஸ் மக்கள் வழக்கத்திற்கு மாறாக 56 சதவீதத்துக்கும் அதிகமானோர் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.

15 செப்ரெம்பர் பாராளுமன்ற விவாதத்தில் EI க்கு எதிரான வான் தாக்குதல்களை சிரியாவில் நடத்துவதற்கான அதிகாரபூர்வ அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் எதிர்ப்புகள் எவையும் பதியப்படவில்லை எனினும் பிரான்ஸ் எவ்விதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என அறிவுறுத்தப்பட்டது.

இதுவரை EI க்கு எதிரான வான் தாக்குதல்களை ஈராக் எல்லைகளில் மட்டுமே பிரான்ஸ் நடாத்திவந்தது. அங்கும் ஈராக் அரசின் கோரிக்கையின் அடிப்படையிலேயே நடாத்தப்பட்டது. ஆனால் சிரியாவின் முகம் முற்றிலும் வேறுவிதமானது. சீரிய அதிபர் Bachar Al Assad இதுவரை எந்தவிதமான உதவிகளுக்கான கோரிக்கைகளையும் உலகநாடுகளிடம் வைக்கவில்லை. ஏன் பேச்சுவார்த்தைகளே இல்லாமல்தான் செயற்படுகிறார். சிரியாவில் மேற்கொள்ளப்படவிருக்கும் பிரான்சின் தாக்குதல்களையடுத்து எவ்விதமான முகத்தைக்காட்டப் போகின்றார் என்பது தான் பிரான்சின் ஐயப்பாடாகவுள்ளது.

## ஆண்களை விட பெண்களே

### அதிக நேரம் நித்திரை கொள்ள வேண்டும்!

பெண்கள் தங்கள் நாளாந்தங்களில் ஒரே நேரத்தில் பல முடிவுகளை எடுக்க வேண்டியவர்களாகவும் பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்ய வேண்டியவர்களாகவும் உள்ளனர். இச்செயற்பாடுகளுக்காக மூளை ஓயாது உழைக்கின்றது. இதனால் பெண்களின் மூளைக்கு சரியான அளவு ஓய்வு தேவைப்படுகின்றது.

மூளைக்கு ஓய்வு சரியான விதத்தில் கொடுக்கப்படாதபட்சத்தில் மன உளைச்சல், பதட்டம் மற்றும் இருதய நோய்கள் வருவதற்கான சாத்தியங்கள் அதிகமுள்ளதாக அமெரிக்க Duke பல்கலைக்கழக ஆய்வாளர்கள்



தெரிவித்துள்ளனர். சரியான அளவு தூக்கம் என்பது அனைவருக்கும் முக்கியமானதே. இருப்பினும் பெண்களுக்கு அதிக நேர ஓய்வு கட்டாயம் என மருத்துவ ஆய்வு அறிவுறுத்துகிறது.

பிரான்சில் மட்டும் மூன்றில் ஒருவர் தூக்கமின்மையால் தவிப்பதாகவும் அறிக்கை அடிக்கோடிட்டுள்ளது.


1990
மோகன் ஜுவல்றிமாட் ஆதரவில்
ஆர்.ரி.எம் பிறதர்ஸ் பெருமையுடன் வழங்கும்
23வது வெள்ளிவிழா
கலைத்தென்றல்
பாட்டுத்திறன் போட்டி
12வது இசைபாடும் இரவு
பாரிஸ் ஸ்ருதி இசைக்குழுவினரின் இசையில்
இசைக்குயில் 2015
30 போட்டியாளர்கள் கலந்துகொள்ளும் விறுவிறுப்பான போட்டி
சிறப்பு மதிப்பளிப்பு
18.10.2015
ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல்
14.00 மணி
வண்ணை தெய்வம்
அர்ச்சனா செல்லத்துரை (டென்மார்க்)
முதலாவது பரிசு - தங்கப் பதக்கம்
Phone2000 & Kings Travels வழங்கும்
Iphone 6 - இந்தியா செல்வதற்கான பயணச் சீட்டு
இன்னும் பல தங்கப் பதக்கங்கள்
பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும்
தர்மலிங்கம் பாஸ்கரன் (பாபு)
நிகழ்வு மண்டபம்:
LA SCÈNE WATTEAU
1, Place du théâtre
94736 Nogent sur Marne Cedex
(RER E: Nogent le Perreaux)
மேலதிக தொடர்புகளுக்கு :
ஸ்ரீ பாரதி அச்சகம்
06 60 23 44 06 - 01 42 05 46 04
நகைச்சுவை, தனி நடிப்பு
கலைஞர்கள், வர்த்தகர், மதிப்பளிப்பு
மேலைத்தேய நடனங்கள்
கிருத்திகா விஜிதன்
அவதாரம்
RC New Boys & Girls
ஆத்மா
இளம்குருதி
கவிநயன் G



சிறந்த சேவைகளுடன் குறைந்த விலையில்
கொழும்பு, சென்னை செல்வதற்கு...
KUWAIT AIRWAYS
40 Kg பயணப் பொதி : பெரியவர்கள், சிறுவர்களுக்கு
10 Kg பயணப் பொதி : குழந்தைகளுக்கு (0-2 வயது)
அனுமதிக்கப்படும்
விபரங்கள் மற்றும் பதிவுகளுக்கு
உங்கள் வழமையான பயணமுகவர்கள் அல்லது
KUWAIT AIRWAYS
17, Avenue George V
75008 Paris
Tél : 01 47 20 75 15
email : par@kuwaitairways.com
www.kuwaitairways.com
KUWAIT AIRWAYS
Since 1954
புதியரக விமான சேவை Airbus 330 - 200



# சுற்றுலாத்துறை மூலம் அதிகமான வருமானத்தை ஈட்ட பிரான்ஸ் சுற்றுலாத்துறை தீர்மானம்

இந்த வருடத்தில் எட்டரைக்கோடி சுற்றுலாப்பயணிகள் வருகை தருவார்கள் என்பது பிரான்சின் வெளிநாட்டமைச்சர் லோறன் பபியுஸின் நம்பிக்கை. அதன்மூலம் 2015ம் ஆண்டில் உலக அளவில் சாதனையைப் படைப்போம் என்பதும் அவரது கனவு.

உல்லாசத்துறையின் வருமானம் உலக அளவில் 4வீதத்தினால் அதிகரிக்கும் என்று நம்பப்படுகின்றது. யூரோவின் பெறுமதி வீழ்ச்சியால் அதிகமான சுற்றுலாப்பயணிகள் வருவதும் அதிகரிப்புக்கான காரணம்.

இருப்பினும் பாரிஸ் நகரை நோக்கி ஏராளம் பயணிகள் வருகை செய்தாலும் வருமானங்கள் ஏமாற்றம் தருவதாகவே உள்ளன. பிரான்சின் புகழ்பெற்ற நினைவுச் சின்னமான ஈபில் கோபுரத்தையும் உலகின் அழகான வீதி என வர்ணிக்கப்படும் சாம்ஸெலிசே வீதியையும் பார்வையிட்டாலும் நகரில் தங்குவதற்கான விடுதிகளின் விலை அதிகரிப்பு காரணமாக உல்லாசப்பணிகள் ஹோட்டல் களைத் தவிர்க்கின்றனர். அவர்கள் குறைந்த விலையில் உள்ள தொடர்மாடி வீடுகளை நாள் வாடகையில் எடுத்து தங்கு கின்றனர். இப்படியாகப் பாரிசில் உல்லாசப்பயணிகள் விடுதிகளைத் தவிர்த்து தொடர்மாடி வீடுகளில் தங்குவது 25 வீதம் வரை அதிகரித்துள்ளமை பொருளாதார ரீதியில் பின்னடைவாகவே உள்ளது. இது சுற்றுலாத்துறையின் வருமான-த்தில் பெருந்தாக்கமாக அமைய வாய்ப்புள்ளது.


Union des anciens élèves tamouls de Sri Lanka - France

இலங்கைத் தமிழ் பழைய மாணவர் ஒன்றியம்

## கருத்தரங்கு

பொருள் : **பிரான்சின் கல்விமுறைபற்றி தமிழ்ப் பெற்றோர் அறியவேண்டியவை**
(குறிப்பாக உயர்கல்வி)

காலம் : **22.11.2015**
ஞாயிறு மாலை 3.00 மணி

இடம் :
5, Rue Pierre l'Ermite
75018 PARIS
Métro: La Chapelle

ஆர்வமுள்ள அனைவரையும்
அன்போடு அழைக்கிறோம்!

தொடர்புகளுக்கு
06.68.81.63.62
06.98.58.19.12
06.61.77.82.76

**இலங்கைத் தமிழ் பழையமாணவர் ஒன்றியம் - பிரான்ஸ்**


ஓடாதே விழுந்துவிடுவாய் என எச்சரிக்கப்படும் குழந்தையைவிட கவனமாக ஓடு என்று ஊக்கப்படுத்தப்படும் குழந்தையே வாழ்க்கையை சரியான கோணத்தில் பார்க்கிறது.


பிரான்சு கம்பன் கழகம் நடத்தும்
பதினைந்காம் ஆண்டுக் கம்பன் விழா
26.09.2015 சனிக்கிழமை
பிற்பகல் 15.00 முதல் 20.30 வரை
27.09.2015 ஞாயிற்றுக் கிழமை
காலை 11.00 முதல் 20.30 வரை
95140 Garges les Gonesse



**நிலா**
நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

சங்கீதா அச்சகம்
39, Bld. de la Chapelle - 75010 PARIS

ரூபி அச்சகம்
10, Rue Labat - 75018 PARIS

CHANGE MAGENTA
77, Bld. de Magenta - 75010 PARIS

ASI BOUCHERIE
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை -பாரிஸ் 17

Gooday
208, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

யாழ் இறைச்சிக்கடை
6, Rue Perdonnet - 75010 PARIS

SACHI EDUCATION
70, rue Philippe de Girard - 75018 PARIS

NRS COIFFURE
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

ராக ஜோதி மளிகை
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

மாயவர் - மொழிபெயர்ப்பு
7, Rue Perdonnet (M°: La Chapelle)

MGR VIDEO
5, Rue Perdonnet - 75010 Paris

தமிழாலயம்
19, Rue Cail, 75010 Paris

மாலா மளிகை
4, Place de Salengro - Garges les Gonesse

அறிவாலயம் புத்தகசாலை
7, Rue Perdonnet (M°: La Chapelle)

Karan Coiffure
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

SHAEE CASH & CARRY
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

RESTAURANT PARADISE
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

ஞானமணி பல்பொருள் அங்காடி
218, Rue. Anatole Francy - 93 Drancy

அம்பாள் ஸ்ரோஸ்
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

தமிழ்ச்சோலை - தமிழ்ச்சங்கம்
Le Blanc Mesnil

அஷ்டலக்சுமி கோயில்
1, Rue Ledru Rollin - 94600 Choisy le Roi

Sagana Coiffure
64, Rue Louis Blanc (M°: La Chapelle)

கிருஷ்ணா அச்சகம்
73, Rue Doudeauville - 75018 Paris

GADS EXO
14, Bis, rue Emile zola 93400 St.Ouen
M°: Pte de St. Ouen)

அல்லையூர் செய்திகளை அறிய..
www. Allaiyoor.com


மகிழ்ச்சியில் **மிகப்பெரிய மகிழ்ச்சி**
பிறரை மகிழ்ச்சிப் படுத்திப் பார்ப்பதுதான்!




இது சங்கீதா அச்சகத்தின் விளம்பர வெளியீடு

# உலகக் கோப்பையை வெல்வதே எமது இலட்சியம்!



பிரான்ஸ் மூன்று முறை இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியிருந்தாலும் உலகக்கோப்பையை இதுவரை கைப்பற்றவில்லை. நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, தென்ஆபிரிக்கா ஆகியன இரண்டு முறையும் இங்கிலாந்து ஒரு முறையுமே கோப்பையை வென்றுள்ளன. இதே போல் ஆரம்பக்கட்டப் போட்டிகளுக்கு 16 முதல் 20 நாடுகள் தகமை பெற்றிருந்தாலும் இறுதிக்கட்டப்போட்டிகளில் குறிப்பிட்ட ஆறு நாடுகளே தொடர்ந்தும் போட்டியிட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸ் உலக அளவில் ரக்பியில் பிரபலமான வீரர்களையும் அதிக அளவு ஆதரவாளர்களையும் கொண்டுள்ளது. இதுவரை தவறவிட்ட கோப்பையை இம்முறை எப்படியாவது கவர்ந்துவிடுவதே எமது இலட்சியம் எனத்தெரிவித்துள்ளார். பிரான்ஸ் அணித்தலைவர் Thierry Dusautoir. இன்னும் Rugby ஐ தோற்றுவித்த நாடான இங்கிலாந்தில் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தை வீழ்த்தி கோப்பையைக் கைப்பற்றி பிரான்ஸ் ரக்பிக்கு பெருமை சேர்ப்போம் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

காலங்காலமாக பிரான்சின் ஒரே ஒரு ரக்பி எதிரியென்றால் அது All Blacks என வர்ணிக்கப்படும் நியூசிலாந்து அணியே. ஒவ்வொரு போட்டிகளின் ஆரம்பத்தில் நியூசிலாந்து அணியினர் துள்ளிப்பாடி மூர்க்கமாக ஆடும் Haka என அழைக்கப்படும் பாரம்பரிய நடனத்துக்கு முன்னால் பிரான்சின் மூன்று வர்ணக்கொடி படபடக்க நெஞ்சை நிமிர்த்தி நிற்கும் போது எம் காதுகளில் வெற்றி என்ற சொல்லைத் தவிர வேறு எதுவும் கேட்காது எனக்குறிப்பிட்ட Thierry Dusautoir இம்முறை எப்படியாவது உலகக்கோப்பையை வென்று வருவோம் என்கிறார்.

**ரக்பி** விளையாட்டு 1823ம் ஆண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த William Webb Ellis ஆல் தோற்றுவிக்கப்பட்டது. 18 செப்டெம்பர் அன்று இங்கிலாந்தில் இவ்வருட ரக்பி உலகக்கிண்ணப்போட்டி ஆரம்பமாகியுள்ளது. 44 நாட்கள் தொடரவிருக்கும் இப்போட்டிகள் ரக்பி பிரியர்களுக்கு கொண்டாட்டம்தான். 1987 முதல் நடாத்தப்படும் உலகக்கோப்பைப் போட்டிகளில் 2015 போட்டிகள் எட்டாவது உலகக்கோப்பையாகும்.





சங்கீதா அச்சகம் - 01 44 72 08 94

V.S. கிருஷ்ணபிள்ளை
(மாயவர்)
மொழிபெயர்ப்பாளர்
சகல நீதி, நிர்வாக சேவைகளால் ஏற்றுக்கொள்ளப்படும் மொழிபெயர்ப்புகள் செய்து கொடுக்கப்படும்.
புதிய முகவரி :
7, Rue Perdonnet - 75010 Paris
M°: La Chapelle / Gare du Nord
[அறிவாலயம் புத்தகசாலைக்கு அருகில்]
Tél./ Fax : 09.82.24.78.98
Mob : 06.86.38.10.57

இரும்பிலிருந்து தோன்றிய துரு, அந்த இரும்பையே அரித்துத் தின்றுவிடுகிறது. அதுபோலவே ஒருவரிடம் தோன்றும் தீய எண்ணங்கள் அந்த மனிதரையே அழித்துவிடும்.

- கௌதமபுத்தர் -

## நிலா குறுக்கெழுத்துப் போட்டி - 19



**மேலிருந்து கீழ்**

1. அன்னதான மடம் (8)
2. நீர் வடிவில் இருக்கும் ஒரு பொருள் (குழம்பியுள்ளது) (4)
3. கைகளில் இதைப்பார்த்தும் எதிர்காலம் குறிக்கப்படுகிறது (குழம்பியுள்ளது) (3)
4. பாணன் பாடி பரிசுபெற்ற நிலம் (6)
5. இந்தபாத்திரத்தில் சமைப்பது தமிழ் பாரம்பரியம் (2) (மாறியுள்ளது)
7. தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகளில் ஒன்று (குழம்பியுள்ளது) (7)
10. சுற்றிவிட்டால் சுழன்று கொண்டே இருக்கும் (மாறியுள்ளது) (5)
12. ஆடு இதை மேயும் (2)
13. எண் சாண் உடம்பின் தலையாய அங்கம் (2)

**இடமிருந்து வலம்**

1. உலகின் மிகச்சிறிய கண்டம் (7)
4. பாலூட்டி வகையைச் சேர்ந்த தாவர உண்ணி (2)
6. கேட்டல், பார்த்தல், உணர்தல், சுவைத்தல், நுகர்தல் ஆகியவை ஐம் ... ஆகும் (மாறியுள்ளது) (3)
8. ஒப்பந்தத்தின் இறுதியில் இடப்படுவது (குழம்பியுள்ளது) (5)
9. இயந்திரங்கள் இதன் வழியே நகரும் (5)
11. கிழக்காசிய தத்துவச் சித்தர்களில் ஒருவர் (குழம்பியுள்ளது) (4)
14. நடராஜரின் பதிகளில் ஒன்று (குழம்பியுள்ளது) (8)
15. ஆண்டுக்கொரு முறை இறந்த மூதாதையர்களுக்கு நடாத்தப்படும் மத அனுட்டானம் (4)
16. ஐம்பெருங்காப்பியங்களிலொன்று. (மாறியுள்ளது) (8)

✔ உங்கள் பதில்களை 10 கார்த்திகை 2015 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும் சரியான விடை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள் !

நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.18ல் பரிசு பெறுபவர்கள்.

1. சி. நாகேஸ்வரி (Malakoff)
2. சண் யுனைட் (Le Blanc-Mesnil)
3. நகுலேஸ்வரன் முத்துச்சாமி (Clichy)

**சரியான விடை எழுதியவர் :**

- தாவீது ஞானசிங்காரம் (Le Blanc-Mesnil)